சுருக்கம்

பள்ளிக் கல்வி - பகுதி II திட்டம் – 2008 -2009 – புதிதாக உருவாக்கப்பட்ட 5 மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு 5 கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (எக்ஸ்.2) துறை

அரசாணை (1டி) எண். 197 நாள் 22.5.2008.

படிக்கப்பட்டவை

அரசாணை (நிலை) எண்.199 பள்ளிக் கல்வி (எக்ஸ்.2) துறை, நாள்.9.8.2007.

***

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணையில், திருவள்ளூர், கடலூர், தஞ்சாவூர், விருதுநகர் மற்றும் ஈரோடு ஆகிய 5 மாவட்டங்களில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களில் பள்ளி சார்ந்த விவரங்களை தொகுத்தல் பணிகள் மேற்கொள்ளவும் அரசின் மின் ஆளுமை திட்டத்தின்படி மேற்படி அலுவலங்களுக்கு கணினிகள் மற்றும் துணைப் பாகங்கள் (அலுவலகம் ஒன்றுக்கு ஒரு கணினி வீதம்) வழங்க தொடராச் செலவினமாக ரூ 3.00 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) 2008-2009 பகுதி II திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகின்றது.

2. இச்செலவினத்தினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கலாம்.

"2202 - பொதுக் கல்வி 02. இடைநிலைக்கல்வி 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் - I - திட்டத்தில் சேராதது - AC மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்-நிருவாகம்- 76 கணினியும் துணைப்பாகங்களும் - 01 வாங்குதல்" (த.தொ.கு. 2202 02 001 AC 7614)

3.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 23626/கல்வி.II/2008, நாள் 20.5.2008-ல் வழங்கப் பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்
அரசு செயலாளர்

பெறுநர்
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
மாநில கணக்காயர், சென்னை.18
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூலகங்கள்,
நகல்
நிதி (கல்வி II /வ.செ.தி-பொது-II) துறை, சென்னை-9
பள்ளிக் கல்வி (வ.செ) துறை, சென்னை-9
இ.கோ./உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்